1982 பிப்ரவரி 15]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பொதுவாக இந்த மையங்கள் வவசாயத் தொடர்பான விதைகள், உரங்கள், பூச்சி மருந்துகள், டீஸல், ஆயில், விசைதெளிப்பான், விவசாய உபகரணங்கள், விவசாயக் கருவிகளுக்குத் தேவையான உதிரி பாகங்கள், இந்தத் தொழில்களை நடத்தலாம், வியாபாரத்தை நடத்தலாம் என்றுதான் மையங்களுக்கு நாம் அறிவுறுத்தியிருக்கிறோம். சில மையங்கள் நிதி ஆதாரம் இல்லாத சூழ்நிலையில் பெரும்பாலான வியாபாரங்களை மேற்கொள்ள முடியவில்லை. அவைகளுக்கு ஏதாவது உதவி செய்து சிறந்தமுறையில் அவைகளை நடத்துவதற்கு அந்த மையங்களை தயார்படுத்தலாமா என்று அரசு இப்போது யோசித்துக்கொண்டிருக்கிறது.

திரு. செ. இராமலிங்கம்: இந்த 217 மையங்கள் தவிர இன்னும் பல மையங்கள் துவங்குவதற்காக விவசாயிகளிடம் இருந்து பங்குத் தொகை வசூலிக்கப்பட்டிருக்கிறது. மூன்று நான்கு ஆண்டுகளுக்கு முன்னால். ஆனால் அந்த மையங்கள் எல்லாம் துவங்கப்படவில்லை. ஆனால் அவர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட பங்குத் தொகை மட்டும் டெப்பாஸிட் செய்யப்பட்டுள்ளது. எனவே ஒன்று அந்த மையங்கள் ஆரம்பிக்கப்படவேண்டும் அல்லது வசூலிக்கப்பட்ட அந்தப் பங்குத் தொகை திருப்பித் தரப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: தலைவர் அவர்களே, எந்தெந்தப் பகுதிகளிலே அப்படி பங்குத் தொகை வசூலிக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தகவல் தந்தால், அதுகுறித்துப் பதில் சொல்ல முடியும்.

வேடசந்தூர் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கனிமங்கள் குறித்த ஆய்வுகள்.

* வினா எண்—215. திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், வேடசந்தூர் பகுதியில் பீங்கான் பொருள்களுக்கு தேவைப்படும் மூலப்பொருள் எடுக்கும் சாத்தியக் கூறுகள் பற்றி ஆய்வு செய்யப்பட்டதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) ஆம்.

(ஆ) மதுரை மாவட்டம் வேடசந்தூர் வட்டம் ரெங்கமலை வரையறுக்கப்பட்ட வனங்களில் வெங்கக்கல் (quartz) மற்றும் கனிமம் (feldspar) முதலிய கனிமங்கள் இருப்பது அறியப்பட்டது. இக்கனிமங்களைப் பற்றிய தரம் மற்றும் இருப்பு அளவினை அறிவதற்கு களப்பணி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 1980 ஆம் ஆண்டில் மேற்கூறிய கனிமங்களுக்கு தமிழ்நாடு கனிம நிறுவனத்தினர் சுரங்க குத்தகைக்கு மனுச் செய்துள்ளனர். அது அரசின் ஆய்வில் இருக்கிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வினா வேடசந்தூரைப் பற்றி இருந்தாலும்கூட, வேடசந்தூர் பகுதியில் ரெங்கமலையிலிருந்து, திண்டுக்கல் பகுதியில் தாடிக்கெம்பு வரையில் மூலப்பொருள்கள் ஏராளமாக இருக்கின்றன. எனவே, ஆய்வு நடத்தி அந்தப் பகுதியில், அதாவது வேடசந்தூர் பகுதியில் பீங்கான் தொழிற்சாலை அமைக்க இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியில் மேற்கண்ட சுமார் 96,700 டன்கள் வெங்கக் கல்லும், 16,750 டன்கள் கனிமமும் உள்ளதாக ஆய்வில் கணக்கிடப் பட்டுள்ளது. அந்தப் பகுதிகளில் தொழிற்சாலை வைப்பதற் கான எண்ணமில்லை. அதை ஒட்டியிருக்கிற அந்தப் பகுதி களில் ஒரு சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு அரசின் ஆய்விலே இருக்கிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பீங்கான் மூலப்பொருளுக் கான வெங்கக்கற்களை தனியார் யார்யாரோ லாரிகளில் எடுத்துக் கொண்டு போகிறார்கள். சிமெண்ட் தொழிற்சாலை ஏற்படுத்து வதற்கான திட்டம் இந்த அரசின் ஆய்விலே இருந்தாலும்கூட, தமிழக கனிவள நிறுவனம் மூலமாக அந்தக் கற்களை விற்பதற் கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். டாமின் நிறுவனம் விண்ணப்பித்திருக்கிறது. அது ரிசர்வ்ட் பாரஸ்ட் பகுதியாக இருப்பதால், மத்திய அரசின் அனுமதியைப் பெற வேண்டும். அதற்காகக் காத்திருக்கிறது. வெகு விரைவிலே அந்த டாமின் நிறுவனத்திற்கு அந்தப் பகுதிகளைக் கொடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அப்போது அந்தப் பகுதி களிலே இருக்கும் வெங்கக்கற்களை டாமின் நிறுவனம் வியாபார முறையில் விற்க ஈடுபடும்.

திரு என். வரதராஜன்: தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் வேடசந்தூர் வட்டாரத்தில் கனிமப் பொருள்கள் பற்றி ஆராய்ச்சி இருப்பதாகச் சொன்னார்கள். அங்கே மிக விலை உயர்ந்த நீலக் கற்கள் இருக்கின்றன. அதைத் தனி நபர்கள் எடுத்துச் செல்லுகிறார்கள். ஆகவே, இந்தப் பகுதியிலே இதற்கான ஆய்வையும் இந்த அரசு மேற்கொண்டு, பொது மக்களுக்கு பயன்படும் வகையில் ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப் படுமா? அல்லது அதற்கான ஆய்வைச் செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

1982 பிப்ரவரி 15]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல், அங்கே 40 கோடி ரூபாய் மதிப்பில் சிமெண்ட் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு மத்திய அரசின் அனுமதியைக் கேட்டுள்ளோம். மத்திய அரசின் அனுமதி கிடைக்காமல், அங்கே தேங்கியிருக்கிறது. நீல நிற கற்கள் அங்கே எவ்வளவு இருக்கின்றன என்ற விவரம் என்னிடத்திலே இல்லை. இதற்கு முன்னால் ஆய்வு மேற்கொள்ளப்படாமல் இருந்தால், அதற்கான ஆய்வு அரசின் சார்பிலே மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாட்டில் உப்பு உற்பத்தி.

*வினா எண் 216—திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உப்பு எங்கெங்கு அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது?

(ஆ) விற்பனை செய்வதற்கு தமிழ்நாடு அரசின் உதவி என்ன?

(இ) நவீன முறையில் உப்பு உற்பத்தியை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட இடங்களில் அதிக அளவிலான உப்பு உற்பத்தி செய்யப்படுகிறது:—

(1) திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடி மற்றும் வேப்பலோடை;

(2) கன்னியாகுமரி மாவட்டத்தில் மனக்குடி மற்றும் கோவளம்.

(3) இராமநாதபுரம் மாவட்டத்தில் மாரியூர், வாலிநோக்கம்.

(4) தஞ்சாவூர் மாவட்டத்தில் அதிராமபட்டினம் மற்றும் வேதாரண்யம்.

(5) தென்னாற்காடு மாவட்டத்தில் மரக்காணம்.

(6) செங்கல்பட்டு மாவட்டத்தில் சுணாம்பேடு கோவளம் மற்றும் எண்ணூர்.